**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – சிறப்புப் பள்ளிகள் – அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் நடத்தும் சிறப்புப் பள்ளிகளில் ஏழாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் 287 மாணவ/மாணவியருக்கு 2014–2015ஆம் கல்வி ஆண்டிற்கு விலையில்லா பிரெய்லி பாட புத்தகங்கள் வழங்கியதற்கான செலவினம் ரூ.1,24,238/– அனுமதித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந 2(1))த் துறை

அரசாணை (1D) எண். 20

நாள்: 12–08–2015
மன்மத, ஆடி 27,
திருவள்ளுவர் ஆண்டு 2046

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.91, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.1)த் துறை, நாள் 25–10–2013.
2. அரசாணை(நிலை) எண்.08, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2)த் துறை நாள் 28–02–2014.
3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், ந.க.எண்.3284/சிபதி/2014, நாள் 14.1.2015 மற்றும் 25.2.2015

------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைகள் / திட்டங்கள், அனைத்து அரசு சிறப்புப் பள்ளிகளுக்கும் பொருந்தும் என கொள்கை அளவில் ஆணை வெளியிடப்படுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில், அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனப் பள்ளிகளில், ஒன்று முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு, தமிழ்நாடுப் பாடநூல் கழகத்திடமிருந்து பாடப் புத்தகங்களைப் பெற்று இலவசமாக வழங்கிடும் வகையில் 2012–13 ஆம் ஆண்டிற்கு ரூ.6,96,552/– செலவினம் அனுமதித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் மேலே, மூன்றில் படிக்கப்பட்ட கடிதங்களில், 2013–14 ம் நிதியாண்டிற்கு பார்வைத்திறன் குறைபாடு, செவித்திறன் குறைபாடு மற்றும், கை, கால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகை ரூ.6,96,552/–

முழுவதும் செலவினம் மேற்கொள்ளப்பட்டது எனவும், மேலும் மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி பள்ளி கல்வி துறையின் முதன்மை கல்வி அலுவலர் மூலம் சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு பாட புத்தகங்கள் வழங்கப்பட்டதாக அரசு சிறப்பு பள்ளி தலைமை ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்ட தகவலின்படியும் இக்கல்வியாண்டில் காதுகேளாதோருக்கான/ கை, கால் பாதிப்படைந்த மாணவ / மாணவியர்களுக்கு பாடப்புத்தகங்கள் வழங்கிட நிதி ஒப்பளிப்பு கோரப்படவில்லை என தெரிவித்துள்ளார். **2013–2014** ஆம் நிதியாண்டில் NIVH மூலம் அனுப்பப்பட்ட புத்தகங்களுக்கான விலைப் பட்டியல் தொகைக்கான கடிதம் ஏதும் பெறப்படாததால் கடந்த நிதியாண்டில் **(2013–14)** அரசுக்கு கருத்துரு அனுப்படப்படவில்லை என்றும், தற்போது, பார்வையற்ற மகளிருக்கான அரசு மேல்நிலைப் பள்ளி, திருச்சி, பார்வையற்றோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி, சேலம், பார்வையற்றோருக்கான மேல்நிலைப் பள்ளி, பூவிருந்தவல்லி மற்றும் பார்வையற்ற அரசு மேல்நிலைப் பள்ளி தஞ்சாவூர் ஆகிய சிறப்பு பள்ளிகளில் **7** ஆம் வகுப்பு முதல் **12** ஆம் வகுப்பு வரை பயிலும் **287** மாணவ / மாணவியர்களுக்கு முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் பருவத்திற்கான பிரெய்ல் பாடப் புத்தகங்களை தேசிய பார்வையற்றோருக்கான நிறுவனம் பூவிருந்தவல்லி (NIVH)க்கு வழங்கிட ஏதுவாக ரூ.**1,24,238/–** நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**4.** மேற்காணும் சூழ்நிலையில் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை ஏற்று, அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப் பெறும் சிறப்புப் பள்ளிகளில், ஏழாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் **287** மாற்றுத் திறனாளி மாணவ / மாணவியர்களுக்கு **2014–15** ஆம் கல்வி ஆண்டிற்கு விலையில்லா பாட புத்தகங்களை மண்டல இயக்குநர், தேசிய பார்வையற்றோருக்கான நிறுவனத்திடமிருந்து (NIVH), வாங்கும் வகையில் ரூ.**1,24,238/–** (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்று முப்பத்தெட்டு மட்டும்) தேசிய பார்வையற்றோருக்கான நிறுவனத்திருக்கு வழங்கிட நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

**5.** மேலே பத்தி **4–**ல் அனுமதிக்கப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

| | |
|---|---|
| “**2235–**சமூகப் பாதுகாப்பும் நலனும்**–02–**சமூக நலன்**–101–**மாற்றுத் திறனாளிகள் நலன்**–I–** திட்டத்தில் சேராதது – AA – பார்வையற்றோர் பள்ளி**–68–** புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு ”.<br>(த.தொ. கு. **2235–02–101–AA–6805**) | ரூ.**1,24,238/–** |

**6.** மேலே பத்தி **4–**ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.**1,24,238/–**ல் **2015–2016**ல் வரவு செலவு திட்டத்தில் உரிய கணக்குத் தலைப்பில் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை ரூ.**85,000/–** போக கூடுதலாக தேவைப்படும் ரூ.**39,238/–** **2015–16–**ம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். **2015–16** ஆம் ஆண்டின் இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை **2015–16–**ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு /இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான

கருத்துருவை தவறாமல் நிதித் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.43448/நிதி(சந)/15, நாள் 5.8.2015–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.701 (ஏழு நூற்று ஒன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
தலைமைக் கணக்காயர்,சென்னை–18.

<u>நகல்:-</u>
நிதி (சந/வ.செ.பொ.2) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இ.கோ./உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.